# சிவாமிர்தம்

## மணி விழா

### சிவபுண்ணியம் சிவலிங்கம்




காலம் : 29.11.2014 (சனிக்கிழமை) காலை 9.30 மணி

இடம் : யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கம்

# திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் (B.A.Dip.in Ed. S.L.T.S-1)



**கல்வி:—**

* ஆரம்பக்கல்வி : யாழ்/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்

* உயர்தரம் : யாழ்/ புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி

* உயர்கல்வி : யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

* தொழில் தகைமை : தேசிய கல்வி நிறுவகம் – மகரகம

**சேவை:—**

* K.G/ புனித மரியாள் தமிழ் வித்தியாலயம் – எட்டியாந்தோட்டை

1984.03.12 – 1989.08.13


* யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

1989.08.14 – 2014.07.15

1) 2002.05.26 – 2014.07.15 (பிரதி அதிபர்)

2) 2007.09.14 – 2007.11.11 (பதில் அதிபர்)

# ஆசிச் செய்தி



நீண்ட வரலாற்றினைக் கொண்ட யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நிறைவான கல்விப் பணியாற்றியவர்களின் வரிசையில் குறிப்பிடத் தக்கவர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் என்றால் அதுமிகையாகாது. ஆசிரியராக, பிரதி அதிபராக அவர் கடமையாற்றிய காலங்களில் அவரின் நற்பண்புகளையும், அமைதியான குணத்தையும் கண்டு வியந்திருக்கின்றேன். முருகன் மீது பக்திகொண்ட இவர் தங்கள் குலதெய்வமான காட்டுமலை முருகன் மீது பிள்ளைத்தமிழ் பாடியமை அவரது சமயப்பற்றுக்கு எடுத்துக்காட்டாகும். தமிழ்ப்புலமையும் ஆன்மீக நாட்டமும் கொண்ட இவர் தன் மாணாக்கர்களிடமும் தமிழையும், சமயப்பற்றையும் ஊட்டினார். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும். உயர் பதவிகளிலும், உயர்ந்த நிலையிலும் வாழ்கின்றார்கள். மாணவர்கள் மத்தியிலும் சமூகத்திலும் அவருக்குக் கிடைக்கும் நன்மதிப்பு அவரது சேவைக்குக் கிடைத்த கௌரவம் எனலாம்.

மாணவர்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த ஓய்வுநிலைப் பிரதி அதிபர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் தனது ஓய்வுகாலத்தில் தனது குடும்பத்தவருடன் நோய் நொடியின்றி மகிழ்வுடன் வாழ வெள்ளெருவை விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

**ச. பசுபதீஸ்வர சர்மா**
வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில்,
கோப்பாய்.

யாழ் ஆயரின்

# ஆசிச் செய்தி



காலத்தால் அழியாதது கல்விச் செல்வம். கல்வியைக் கற்று உயர்ந்தவர்கள் தாம் கற்றதோடு நின்றுவிடாமல், அதனை மற்றவர்களுக்கும் கற்பிக்கும் சேவை ஓர் உயர்ந்த சேவை. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற வார்த்தைக்கு ஒப்ப கடந்த முப்பது வருடகால ஆசிரிய சேவையை ஆற்றி ஓய்வுபெறும் ஆசிரியர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களைப் பற்றி நான் அறிந்தவைகளைக் கொண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.


யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் உப அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெறும் ஆசிரியர் அவர்களின் சேவை பாராட்டத்தக்கது. மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டும் பணியில் தன்னை இணைத்துப் பல அரிய சேவைகள் பாடசாலைக்கும், மாணவர்களுக்கும் இவர் ஆற்றியுள்ளார்.

தனது ஓய்வுநிலையை அடைந்து, இவர் கல்விச் சேவையிலிருந்து இளைப்பாறினாலும் தொடர்ந்தும் மாணவர்களின் கல்வித்தேடலில் இவர் பணிபுரியவும் தன் ஓய்வுநிலையில் நல் உடல் உள சுகத்துடன் வாழவும் இறைவனின் அருட்துணை வேண்டிச் செபிப்பதுடன் எனது ஆசியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**பேரருட் திரு இ. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் ஆயர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

## அதிபரின்

# வாழ்த்துரை



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் கல்விப் பணி வரலாற்றில் தடம்பதித்த திரு. சி. சிவலிங்கம் எனும் கனவானைக் கல்லூரிச் சமூகம் இலகுவில் மறக்கமுடியாது.

தனது 30 வருட கல்விச்சேவையில் 25 வருடங்களை இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர். ஆசிரியராக, பிரதி அதிபராக அவர் ஆற்றிய பணியை, அவரது விசுவாசம் மிக்க மாணவர் தொகையை வைத்துக் கணிப்பிடலாம்.

புகழ்பெற்ற பேராசிரியர் K. கைலாசபதி, பண்டிதர் வீரகத்தி, பேராசான் சிவராமலிங்கம்பிள்ளை போன்றோரால் உருவாக்கப்பட்ட தமிழாசிரியர் சி. சிவலிங்கம் அவர்கள் தன்னுடைய அர்ப்பணிப்புமிக்க ஆசிரியப் பணியால் பல மாணவர்களை நன்னிலைக்கு இட்டுச்சென்றார்.

தமிழ்த்துறை வளர்ச்சிக்காகத் தமிழ்ச் சங்கத்தை விருத்திசெய்து பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டவர். தான் மட்டுமன்றி தனது பாரியாரையும் இக் கல்லூரியின் வளர்ச்சியின்பால் ஈர்த்தவர். பல வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து அதிக மாணவ நெஞ்சங்களில் நீங்காத இடம்பெற்றவர்.


ஆறு அதிபர்களுடன் பணியாற்றி பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளிலும் பக்கபலமாக விளங்கும் திரு. சி. சிவலிங்கம் அவர்கள் இக் கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா.

தனது அகவை அறுபதில், ஓய்வுபெற்றாலும் இக் கல்லூரியின் வளர்ச்சியின்பால் அவரது சேவை தொடரவும், அவரது நீடித்த வளமான எதிர்காலத்துக்கும் பிரார்த்திப்போம்.

ச. வேலழகன்
அதிபர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## ஆசிரியத்துவத்தின் குறியீடு - திரு . சி. சிவலிங்கம் ஆசிரியர்

# உள்ளத்திலிருந்து.....



யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியுடனான எனது தொடர்புகள் 1994 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகின. அன்றிலிருந்து எனக்கு நன்கு பரிச்சயமானவர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள்.

இக்கல்லூரி தனது வாழ்வில் பல சிறப்புக்களை, ஏற்றங்களைக் கண்டிருந்தது மட்டுமன்றி; பல துன்ப துயரங்களையும் சுமந்துள்ளது. இக் கல்லூரியின் ஏற்றத்திற் உழைத்த ஆசிரியர் அவர்கள் துன்பம், துயரங்களின் போதும் பக்கபலமாக நின்றதை நான் அறிவேன்.

ஆசிரியர்களின் வாண்மை தொடர்பாகக் குறிப்பிடும்போது, குறித்த பாடத்துறையில் "அவரை விஞ்ச யாருமில்லை" என்ற நிலையை அடைய வேண்டுமெனக் குறிப்பிடுவர். தமிழ்ப் பாடத்துறையில் அவ்வாறானதொரு நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் திரு. சி. சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள்.

ஆசிரியர் அவர்களும், அவரது துணைவியாரும் இறையன்பு மிக்கவர்கள். தம்மிடம் கற்ற மாணவர்களை தமது குழந்தைகளாகவே கருதி கல்வியறிவை ஊட்டியவர்கள். இணைபிரியா இத்தம்பதியர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, கல்விச் சமூகத்திற்குத் தம்மாலான சேவையை ஆற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.


**ஆ. ராஜேந்திரன்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

# வாழ்த்துச்செய்தி



யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியினது பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

முப்பது வருடங்கள் கல்வித்துறையில் ஆசிரியராக, பிரதி அதிபராக நிறைவான சேவையை ஆற்றி இவர் ஓய்வு பெறுகின்றார். கலைமாணிப் பட்டதாரியான இவர் க.பொ.த (சா.த), (உ.த) வகுப்புக்களில் தமிழ்மொழிப் பாடத்தைச் சிறப்பாகக் கற்பிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். இதன்மூலம் இப்பாடசாலையில் இருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கும் இவர் வழிவகுத்தார்.

கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளிலும் தூணாக நின்று செயற்பட்ட இவரது பணிகளைப் பாராட்டுவதோடு, இவரது ஓய்வுக்காலத்தில் மகிழ்வாக வாழ வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ் - கல்வி வலயம்.

# தமிழ்ப் பேராசான்

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக பிரதி அதிபராக உயரிய பணியாற்றி மணிவிழாக் காணும் திரு. சி. சிவலிங்கம் அவர்களது சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மூன்று தசாப்த ஆசிரியர் பணியில் இக்கல்லூரியில் வெள்ளிவிழாக் காணும் திரு. சி.சிவலிங்கம் அவர்கள் சிறந்த தமிழ்ப் பேராசான் ஆவார். மாணவர்களது உள ஆற்றல்களுக்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளை தனக்கே உரித்தான பாணியில் கையாண்டு தனக்கென ஒரு மாணவர் பரம்பரையினை உருவாக்கியவர்.

"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செல்ச்சொல்லு வார்"

என்பதற்கிணங்க. அவரது புலமையின் வெளிப்பாடு இவர் யாழ் கல்வி வலய ஆளுகைச் சபையின் (ZMP) தமிழ்ப்பாட வளவாளராகப் பரிணமிக்க ஏதுவாயிற்று. வலய ஆளுகைச்சபை வளவாளராகப் பணிபுரிந்த காலப்பகுதியில் தமிழ்த்துறை சார்ந்த ஆசிரியர்களுக்கு சிறந்த வழிப்படுத்தலை மேற்கொண்டு தமிழ்ப்பாட உயர் அடைவிற்கு வித்திட்ட பெருமைக்குரியவர் திரு. சி.சிவலிங்கம் அவர்கள்.

கல்லூரித்தாயின் பௌதீகவளத் தேடலுக்கு அவரது பங்களிப்பு அளப்பரியது. தமிழ்ச்சங்கத்தினூடாக கல்லூரி வளாகத்தில் தமிழறிஞர்களது சிலைகளை நிறுவியமை, தமிழ்த்துறைசார் நூல்களை வெளியிட்டு வைத்தமை, தமிழின்பால் அவர்கொண்ட தீராக்காதலின் வெளிப்பாடு எனலாம்.

இவர் தனது ஓய்வுகாலத்தில் தமிழன்னைக்குத் தொண்டாற்றி குடும்பத்தவருடன் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம்வல்ல சந்நிதியான் துணைநிற்பானாக.

**யோ.ரவீந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

## பிரதேச செயலரின்

# வாழ்த்து



யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றி 15.07.2014 ஆம் திகதி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியர்களுடைய பணி மிக உன்னதமானது. அந்தவகையில் முப்பது வருடங்களாக ஆசிரியர் பணியாற்றி பிரதி அதிபராக ஓய்வுபெறும் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்கள் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மிக நீண்டகாலம் அரும்பணியாற்றியுள்ளார்.

25 ஆண்டுகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலே ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் தமிழ்மொழிப் பாடத்தை சிறந்தமுறையில் கற்பித்து பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் கல்வியியற் கல்லூரிகளுக்கும் அனுமதி பெறுவதற்கு காரண கர்த்தாவாக இருந்துள்ளார்.

அத்துடன் பாடசாலை வளாகத்தினுள் தமிழ்த்தாய் சிலை, வள்ளுவர், ஔவையார், தாமோதரம்பிள்ளை போன்றோர்களது உருவச்சிலைகளை நிறுவ முன்னின்று உழைத்தமையானது இவருடைய தமிழ்ப்பற்று சிறந்தமுறையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. 12 வருடங்களாக பிரதி அதிபராக பல அதிபர்களோடு ஒன்றிணைந்து செயற்பட்ட இவருடைய ஓய்வுகாலம் மிகச்சிறப்பாக அமைய எல்லாம்வல்ல இறையருளை வேண்டிநிற்கின்றேன்.

**ம. பிரதீபன்**
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.



60 ஆவது பிறந்ததினத்தில்



இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2014





150 ஆவது ஆண்டு நிறைவு விழாவில்



நூலகத் திறப்பு விழா - அமைச்சர் மகேஸ்வரனுடன்

# கல்லூரியின் ஒளிவிளக்கு



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து, அங்கு தனக்கென ஒரு தனிதடம் பதித்து; ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் பெருமதிப்பைப் பெற்ற ஆசிரியப் பெருந்தகை திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்கள் ஓய்வுபெறுவதை அறிகின்றபோது மிகவும் கவலையாக உள்ளது. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அவரின் சேவை ஏறக்குறைய கால்நூற்றாண்டுகட்கு மேற்பட்டது. இதில் 05 வருடங்கள் என்னுடன் அங்கு கடமையாற்றியுள்ளார். ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை, தியாகம், சீரியசிந்தனை போன்ற உயரிய பண்புகளைக் கொண்டவராக புன்னகை பூத்த முகத்துடன் என்றும் காட்சியளிப்பார்.

அடக்குமுறையும் அளவுகடந்த அதிகாரமும் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய பண்புகளல்ல என்ற உயரிய நோக்குடன் செயற்பட்ட ஒரு ஆசிரியர். ஆசிரியர் உயிர் ஜீவன்களின் தேவைகளுக்கு, உணர்வுகளுக்கு ஏற்ப தொழிற்படவேண்டும் என்ற நோக்குடன் தனது தொழிலை மிகவும் நன்முறையில் செய்த ஒரு ஆசான் சிவலிங்கம் என்றால் மிகையாகாது. பயனுறுதி மிக்க ஆசிரியர்கள் அறிவுதிறன், மனப்பாங்கு என்பவற்றை மாணவரில் விருத்திசெய்யும் கற்பித்தலை மாத்திரம் மேற்கொள்ளலாகாது என்பதை உணர்ந்து பல்கிப்பெருகி வரும் தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும் சமநிலை ஆளுமைமிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் செயற்பட்ட உத்தமர்.


வெறுமனே மனனம் செய்வதை அடிப்படையாகக் கொள்ளாது சிந்தித்தல், நியாயித்தல், பரிசோதனை செய்தல் போன்ற பரந்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் மாணவர்களை உருவாக்கியவர். தனது கற்பித்தலால் ஏற்படும் கற்றலினால் அறிவு, பாத்திரங்களில் திரட்டிவைக்கப்படாமல் புத்தகங்களில் பதித்து வைக்கப்படாமல் மாணவர்களின் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

தமிழை தமிழாகக் கற்பித்து அதில் ஆர்வத்தை ஊட்டி இன்பத்தைப் பெருக்கி உள்ளப்பண்பை ஏற்படுத்தி நல்ல சமூகத்தைத் தோற்றுவித்த ஒரு வித்தகர். தனது கவர்ச்சிகரமான கற்பித்தலின் மூலம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்திய ஒரு ஆசான். அவர் சந்தர்ப்பத்திற்கேற்ப முகபாவனையுடனும் தொனியுடனும் கற்பித்தல் பணியை மேற்கொண்டது மட்டுமன்றி; தான் ஒரு நடிகர் போலவும் வகுப்பறையை ஒரு நாடகமேடை போலவும் மாற்றி தமிழைக் கற்பிக்கும் முறையில் கற்பித்து மாணவர்களை இன்பமடையச் செய்து, மாணவர் நன்மதிப்பைப் பெற்று மாணவர் மனதில் நீங்கா இடம்பெற்ற ஒரு சிறந்த மாணவர் வழிகாட்டி. நான் அண்மையில் பெரிய பிரித்தானியா சென்றிருந்தபோது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர்களைச் சந்தித்தபோது அவர்கள் ஒவ்வொருவரும் "சிவலிங்கம் சேர், சிவலிங்கம் சேர்" எனக் கதைத்திருந்தும், பாடசாலைக்கு உதவி செய்வதற்காக அவரிடம் கதைத்தோம் எனக்கூறியதிலிருந்தும், அவரது மாணவர்கள் அவரைப் பாடசாலையுடன் இரண்டறக் கலந்த ஒரு உத்தமர் என நினைப்பதைக் கண்டும், அவர்கள் அவர்மேல் வைத்திருந்த மதிப்பைப் பார்த்தும் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

வயது என்பது எம்மை ஓய்வுபெறப்பண்ணுகிறது. கல்விப்பணியிலிருந்து என்றும் அவர் ஓய்வுபெற மாட்டார். அவரது எதிர்காலம் அவரது குடும்பத்துடன் என்றும் மகிழ்ச்சியுடன் வாழ அவரது கல்விப்பணி வழிகாட்டும். இன்றுபோல் என்றும் வாழ எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி** (B.A. Dip. in Ed; M.phil (Education)
ஓய்வுநிலை அதிபர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு.

# வாழிய நெடிதே....



சிவபுண்ணியம் சிவலிங்கம் ஓய்வு பெறுகிறார்
என்ற செய்தியைக் கேட்டதும்
அப்பாடா.... இவனுக்கும் அறுபதாகிவிட்டதா?
ஆச்சரியத்தால் என் கண்கள் அகலத் திறந்தன.
எழுபதுகளில் தொடங்கி எண்பதுகளில் நிறைவுற்ற
அவரது பல்கலைக்கழக மாணவப் பருவம்
நினைவுத் திரையில் நிழலாடியது.
அச்சுவேலி அழகான, செழிப்பான கிராமம்
மண்ணோடு போராடி மனதோடு உறவாடி
வாழும் விவசாயக் குடும்பம்.
சி. சிவலிங்கம் - நீ
சி. சிவலிங்கராசா நான்
என்னுடன் ஒரு இராசா ஒட்டிக் கொண்டாலும்
ஊராலும், உறவாலும், நட்பாலும்
நான் சிவலிங்கம் தான்.
பேராசிரியர் கைலாசபதியின் அபிமான மாணவனாய்,
மூதறிஞர் சிவராமலிங்கம் ஆசிரியரின்
'திருக்குறிப்புத்' தொண்டனாய், மாணவனாய்,
பண்டிதர் க. வீரகத்தியைச் சைக்கிள் "பாரிலே" வைத்துத்
தினமும் பயணிக்கும் பார்த்த சாரதியாய்,
எனக்கு நண்பனாய், மந்திரியாய், மாணவனாய்,
நீ வாழ்ந்த காலங்கள் - நினைக்க நினைக்க இனிக்கின்றன.
அந்தநாள் வாராதோ? என்ற ஆதங்கம் - என்
அடிமனதில் வேரோடுகிறது.
பண்பு, பணிவு, படிப்பு, தேடல், எல்லாம் ஒருங்கே அமைந்த
மானுடம் - மனிதம், சிவலிங்கம்.

உன் தமிழார்வமும், என் தமிழார்வமும், கைலாசபதியின் தமிழ் ஆற்றலும்
திரிவேணி சங்கமம் ஆகிய நாள்கள்
நினைக்க, நினைக்க இனிக்கிறது.
கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல்
நீ படித்து வந்து கூறும் பாங்கு
எனக்கு ஒரு படிப்பாகியது.
உன் வளர்ச்சி கண்டு, உயர்ச்சி கண்டு, திறமை கண்டு
உளம் மகிழ்ந்தவன் நான்.
நீ, இராகினிதேவியை மணம் செய்தபோது
அந்த நிகழ்விலே 'மாப்பிள்ளை வீட்டு' ஆளாய்
நான் நின்றது.......
உன் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தை
அரங்கேற்றிப் பேசி ஆனந்தித்தது.
ராகினியின் சிறுகதைத் தொகுதி வெளியீட்டிலே
'கலந்து பேசி' மகிழ்ந்தது.
எனக்கு என்றும் இனிப்பான, உவப்பான
சிவலிங்கம் வாழிய நெடிதே,
இராகினி சிவலிங்கம் வாழிய இனிதே!

அன்புடன்
பேராசிரியர். **எஸ். சிவலிங்கராஜா**

# கல்லூரியின் சாதனையாளனே வாழ்க!



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கால்நூற்றாண்டு காலம் ஆசிரியராக, பிரதி அதிபராகச் சேவையாற்றிய நண்பன் திரு. சி சிவலிங்கம் 15.07.2014 இல் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இவர் இக்காலத்தில் ஆற்றிய சேவைகள் கல்லூரிச் சமூகத்தால் மறக்கமுடியாதவை. இவர் தமிழையும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் கற்பித்து க.பொ.த (சாதாரண, உயர்தர) பெறுபேற்றை அதிகரிக்க அரும்பாடுபட்டார். இவர் கற்பிக்கும்போதும் உரையாற்றும் வேளையிலும் சிந்தனைத்திறன், ஆய்வுத்திறன், விமர்சிக்கும் திறன் போன்றன வெளிப்படுவதையும் இலக்கிய நயத்துடன் பேசுவதையும் கேட்டிருக்கின்றேன். பேராசிரியர் K. கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்ற மகான்களிடம் கல்விகற்ற காரணத்தால் அவர்களின் சாயல் இவரின் மொழிநடையில் பிரதிபலிப்பதைக் காணமுடியும். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அனேகமான மாணவர்கள் கலைத்துறையில் பல்கலைக்கழகம் செல்வதற்கு மூலகாரணமாக இருந்துள்ளார்.

கல்லூரி வளாகத்தில் தமிழ்த்தாய், வள்ளுவர், ஔவையார், தாமோதரம்பிள்ளை போன்றோரின் சிலைகளை நிறுவி மாணவர்களிடையே தமிழ்ப்பற்றை ஊட்டினார். கல்லூரியில் தமிழ்விழா ஆண்டுதோறும் நடைபெறுவதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர். இக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு மலர் 160 ஆவது நிறைவு மலர், பல்வேறு சஞ்சிகைகளின் ஆக்கங்களின் சிற்பியாக விளங்கி எல்லா அதிபர்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர். கல்லூரியின் பிரதி அதிபராக இருந்தபொழுது தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கியவர். என்னால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துச் செயல்திட்டங்களையும் பொருத்தமான ஆசிரியர்கள் ஊடாக நிறைவேற்றிய செயல் வீரன். இத்தகைய பெருமைக்குரிய ஆசிரியர் கல்லூரியிலிருந்து ஓய்வு பெறுவது பாடசாலைக்கும், கல்லூரிச் சமூகத்திற்கும் இழப்பாகக் கருதினாலும், ஓய்வு தவிர்க்க முடியாதது. இவர் ஓய்வுக்காலத்தில் சீரும், சிறப்புடனும் நோய்நொடி இன்றி நீண்டகாலம் வாழ எல்லாம்வல்ல எம்பெருமான் துணைபுரிவாராக.

**அ. அகிலதாஸ்**
முன்னாள் அதிபர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



## நல் ஆசானுக்கு

# வாழ்த்துக்கள்

யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பிரதி அதிபராகச் சேவையாற்றி தனது 60 ஆவது அகவையில் ஓய்வுபெற்று இன்று மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியர் சேவையில் 30 வருடங்களும் அதில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 25 வருடங்கள் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும், பதில் அதிபராகவும் எனப் பல்வேறுபட்ட படிநிலைகளில் கடமைஆற்றி கல்லூரி வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர் சிவலிங்கம் ஆசிரியர் ஆவார். இவர் குறிப்பாக உயர்தரப் பிரிவில் தமிழ்மொழிப் பாடத்தைக் கற்பிப்பதிலும் அதனூடாக மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பதிலும் மாணவரின் வாழ்க்கைக்குப் பெரிய அடித்தளம் இட்டவராவார். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் நாட்டில் பல்வேறு துறைகளில் பல்வேறு மட்டங்களில் வெளிநாடுகளிலும் சிறப்பாகக் கடமையாற்றி வருவது கண்கூடு.

குறிப்பாக ஏழை மாணவர்களிடத்திலும் போர் சூழலால் பாதிக்கப்பட்ட மாணவர்களிடத்திலும் அதிக கரிசனை கொண்டு அவர்கள் வாழ்வில் உயர்வை வெளிகாட்டியவர் அவர். இதன் காரணமாக அவரிடம் கற்று உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் சிறப்புடன் வாழ்கின்ற பழைய மாணவர்களினால் இம் மணிவிழா சிறப்புற முன்னெடுக்கப்பட்டு இம் மலரும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.


நான் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவன். எனது சேவைக் காலத்தில், என்னை வளர்த்தெடுத்த இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றியமை மிகுந்த மனநிறைவைத் தருகின்றது. இந்த ஏழு வருடங்களிலும் கல்லூரி பிரதி அதிபராகக் கடமையாற்றி என்னுடன் இணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள் உறுதுணையாக இருந்தார்.

கற்றல் நடவடிக்கைகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மற்றும் மாணவர்களின் ஒழுங்கு கட்டுப்பாடு என்பவற்றிலும் சிறப்புறச் செயலாற்றிய இவர் எந்தவொரு காலகட்டத்திலும் பாடசாலைக்கு காலம் தாழ்த்தி வந்தது கிடையாது. அத்துடன் வருடத்தில் இரண்டு, மூன்று நாட்களுக்கு மேல் லீவு பெறுவதும் இல்லை. தனது தாய்மண்ணான அச்சுவேலியில் உள்ள காட்டுமலைக் கந்தன் உற்சவத்திற்கு மட்டும் இருநாட்கள் லீவு பெறுவார். அத்துடன் சமூக சேவையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

சிவலிங்கம் ஆசிரியரது ஓய்வானது கல்லூரிக்கு இழப்பாகும். இருந்தபொழுதிலும் அறுபது வயதில் ஓய்வுபெறுவது பொதுநியதி ஆகும். எனவே இவர் இனிவரும் காலங்களிலும் பல கல்விப்பணி, சமூகப்பணி என்பவற்றிலும் ஈடுபட்டு மக்களுக்கு சேவையாற்றவும், அவரது ஓய்வுகாலம் நோய் நொடியின்றி சிறப்பாகவும் அமைய இறையாசி கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**க. இ. இராசசேகரம்**
ஓய்வுநிலை அதிபர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் B.A, Dip.in Edu.
## ஓய்வுநிலை பிரதி அதிபர்



திருவாளர் சிவபுண்ணியம் சிவலிங்கம் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஓய்வுநிலைப் பிரதி அதிபர் அவர்கள் எமது மனதில் நிறைந்தவர். புன்முறுவலுடன் இன்முகம் காட்டி எல்லோரையும் கவர்ந்து எமது தேவைகளை, கருமங்களைப் பூர்த்திசெய்து வைக்கும் திறமை உள்ளவர். நான் அவரோடு சேவைசெய்த காலத்திலும் பிற்காலத்திலும் நான் அறிந்தவரையில் ஒருவரைப் புண்படப் பேசியதோ, விரோதித்ததோ கிடையாது. தனக்குக் கொடுத்த கருமங்களை, பொறுப்புக்களை மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது செய்து முடித்ததில் வல்லவர். இவர் தற்போது பிரதி அதிபர் பதவியில் ஓய்வுநிலை பெற்று ஓய்வாக வீட்டில் இருக்கும்போது இவரைப் பற்றி நான் கண்ட, கேள்விப்பட்ட விடயங்களைத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் தமது பாடசாலைக் கல்வியில் ஆரம்பக்கல்வியை யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியிலும் பெற்றார். யாழ் பல்கலைக்கழக கலைப்பட்டதாரி தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராவர்.

பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் K. கைலாசபதி, பண்டிதர் க. வீரகத்தி, பேராசான் சிவராமலிங்கம்பிள்ளை என்போரிடம் தமிழைக்கற்று அவர்களின் நன் மாணாக்கனாகத் துலங்கினார்.

எட்டியாந்தோட்டை KG/ புனித மரியாள் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். 12.03.1984 - 13.08.1989 வரை கல்வி கற்பித்தார். பேராசிரியர் K. கைலாசபதியின் சுவட்டைப் பின்பற்றி சிறந்தமுறையில் கல்வியைப் புகட்டியதால் மாணவர்களினதும் பிரதேச மக்களினதும், நன்மதிப்பைப் பெற்றார்.

யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு 1989ஆம் ஆண்டு இடம்மாற்றலாகி வந்த இவர் 6 அதிபர்களின் கீழ் சேவை செய்துள்ளார். பாடசாலையின் நல்ல திட்டங்களுக்கும் அபிவிருத்திகளுக்கும் அதிபர்களுக்கு பக்கபலமாக நின்று உழைத்தவர்.

க.பொ.த (சா.த), க.பொ.த (உ.த) வகுப்புக்களில் தமிழ்மொழிப் பாடத்தை சிறந்தமுறையில் கற்பித்தமையால், இவரிடம் கற்பதற்காக தூரகிராமங்களில் இருந்துவந்த மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்தமையால் பாடசாலை மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. ஆண்டுதோறும் கலைத்துறைக்கு பல்கலைக்கழகம் செல்வோர் அதிகரித்தனர். தனக்கென ஓர் மாணவர் பரம்பரையை உருவாக்கியவர். வறிய மாணவர் கல்வி அபிவிருத்திக்காக அயராது உழைத்தவர். இவரது மாணவர்கள் இன்று உயர்ந்த நிலையில் உயர்ந்த பதவிகளில் உள்ளனர்.

தமிழ்ச் சங்கத்திற்குப் பொறுப்பாசிரியராக இருந்தார். தமிழ்த்தாய், வள்ளுவர், ஔவையார், தாமோதரம்பிள்ளை போன்றோரது உருவச் சிலைகளை கல்லூரியில் நிறுவவும், கல்லூரி நுழைவாயில், கல்லூரி கலையரங்க வளைவு மற்றும் கதவுகள் அமைப்பதற்கு வழிகாட்டியாக முன்னின்று உழைத்தவர். சி. வை. தாமோதரம்பிள்ளையின் வரலாற்றை தமிழ்ச் சங்கத்திற்கூடாக வெளியிட்டார்.


கல்லூரிக்கு நேரகாலத்துடன் கடமைக்கு வந்து பாடசாலை முடிந்தவுடன் பிந்தி வீடு செல்வார். கல்லூரி நிகழ்வுகளில் அதிபருக்கு அடுத்தபடியாக நின்று நிகழ்வுகள் சிறப்பாக முடிய உழைத்தவர்.

2002ஆம் ஆண்டில் இருந்து பிரதிஅதிபராக இருந்து நிர்வாகப் பணிகளில், கல்வி அபிவிருத்தியில் காலநேரம் பார்க்காது தன்னை அர்ப்பணித்து உழைத்தவர். கல்லூரியின் 150 ஆவது ஆண்டு மலர், கல்லூரிச் சஞ்சிகைகள், 160 ஆவது ஆண்டு நிறைவு மலர், சுவடு ஆகியவை சிறப்பாக வெளிவர வழிகாட்டியாக இருந்தார்.

திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களை நாம் சிவலிங்கம் சேர் என்றே அன்பாக அழைப்போம். அவர் தமிழ் அபிவிருத்திக்குப் பாடுபட்டது போன்றே அவரது வாழ்க்கைத் துணைவியாரும் அமைந்து விட்டார். பிரதி அதிபர் சிவலிங்கம் சேர் ஓய்வுநிலை அடைந்தாலும் பதவி இடைவெளி இல்லாமல் பிரதி அதிபராக தற்போது சிவலிங்கம் ரீச்சர் அதே கதிரையில் இருந்து கடமை புரிவது சிவலிங்கம் சேர் குடும்பத்திற்குப் பெருமையாகும். அவரது கந்தன் நோய் பிணி இல்லாது அவரது குடும்பம் நீடூழி வாழ இஷ்ட தெய்வம் காட்டு மலைக அருள்புரிவாராக.

**வே. சண்முகலிங்கம்**
ஓய்வுநிலை ஆசிரியர்,
பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர்.

# நாயகனை வாழ்த்துகின்றேன்



மணிவிழாகண்ட திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்கள் சிவலிங்கம் Sir என எல்லோராலும் அன்பாக அறியப்பட்டவர். அச்சுவேலி நாவற்காட்டின் மைந்தன். காட்டு மலைக்கந்தனின் பேரருள் சிறக்கப்பெற்றவர். ஆரம்பக்கல்வியை அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் பெற்றவர். உயர்கல்வியை புத்தூரின் கலைக்கூடமான ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் கற்று பல்கலைக்கழகம் சென்றவர். எனது சமகாலத்தவர். நான் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் உயர்தரம் கற்றகாலத்தில் அவர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் உயர்தரம் கற்றார்.

பிற்காலத்தில் நான் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் அதிபராக இருக்க அவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பிரதி அதிபராக இருந்தவர். நாங்கள் ஆளுக்கு ஆள் ஆலோசனை பெற்று ஆலோசனை வழங்கி செயற்பட்ட காலங்கள். எங்கள் பாடசாலைகள் போட்டிகளில் மோதிக் கொள்கின்ற பொழுதுகளில் அதன் பொறுப்பானவர்களாக, பார்வையாளர்களாக இருவரும் இருந்த சந்தர்ப்பங்கள் உணர்ச்சிகரமானவை. எப்பொழுதும் ஒரு வெற்றியும் ஒரு தோல்வியுமாக திரும்புவோம்.

கிறிஸ்தவ கல்லூரியின் எல்லா நிகழ்வுகளுக்கும் அடிக்கட்டுமானம் சிவலிங்கம் Sir ஆக இருப்பார். ஒவ்வொரு விழாவிற்கும் என்னை எதிர்பார்ப்பார். விழா எப்படி இருந்தது என்று மதிப்பீடு கேட்பார். கையோடு, "அப்ப உங்களுடைய பாடசாலையிலை எப்ப?" என்றும் கேட்பார். தன் பொருளை என்னிடம் காப்புக்குத்தந்த பதிவும் எதிர்பார்ப்பும் ஆதங்கமும் இருக்கும்.

2007ஆம் வருடத்தில் வைகாசியில், காலம் செய்த திருவினையால் நான் எனது பாடசாலை எனச் சொல்லிப் பெருமைப்படும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இணைப்பிலிருக்க வந்தேன். அப்பொழுதுதான் சிவலிங்கம் Sir ஐ எனக்குத் தெரியும். அவர் அப்பொழுது பிரதி அதிபர். அவர் எனக்குத் தன்னிலும் மேலான ஒரு இருக்கையைத் தந்தார். நான் அந்த நாட்களில் ஒரு ஆசிரியராக இருக்க விரும்பியதால் அந்தக் கடமைகளில் ஈடுபட்டேன். அதற்கும் அவர் ஆதரவளித்தார். அவருடைய அன்புமிக்க அணுகுமுறை, பரிவான பேச்சு, செழுமைமிக்க கற்பித்தல், தினமும் புதுப்பிக்கப்படுகிற அறிவு, கற்றறிவும் பட்டறிவும் இணைந்து வளமாக்கிய நிர்வாகத்திறன் தன் அளவை அறிந்து செயற்படும் மனப்பாங்கு நேரம் தவறாமை, சொற்பிறழாமை, பிறர்துன்பம் கண்டு இரங்கும் சுபாவம். ஒத்தாரைப் பொறுத்தருளும் பாங்கு, என்று ஒட்டுமொத்தமாக உன்னத மனிதராக இருந்து வருகிறவர். கிறிஸ்தவ கல்லூரியின் ஒரு பொற்காலத்தின் சிற்பி. இது புகழ்ச்சி அல்ல. உண்மைத்தன்மை அவர்களின் சிறுகதைபுத்தக வெளியீட்டு விழாவுக்கு வந்தவர்களுக்கு விளங்கும்.

அவர் தனது பாடசாலைக்கென சிறப்பான கல்விக் கலாசாரத்தைக் கட்டி எழுப்பியிருந்தவர். அதிபர்கள் மாறும் பொழுதும் பாடசாலைக் கலாசாரத்தை மாறாது பேணியவர். அதிபர்களின் விதி அலைந்து திரிவதாகும். பிரதி அதிபரே பாடசாலையின் அனைத்துக்கும் காலாக காரணியாக காவலாக இருப்பவர். அதனை அவர் சிறப்பாகச் செய்தார்.

தனக்கென புகழ் எதையும் எதிர்பாராது ஒரு சாதாரணன்போல, பல பேருடைய வெற்றிகளின் பின்நின்று உழைப்பவர். அவர் தனது துணைவியாரின் பல வெற்றிகளுக்கு பக்கபலமாக நின்றுழைத்தவர். அவர்கள் இருவருமாக, காட்டுமலைக் கந்தனின் மேல் பாடிய பாமாலை காலத்தை வென்று நிற்கக்கூடியது. தமிழும் சமயமும் இணைந்த குடும்பம் அவருடையது. அது பாடசாலையிலும் ஒளிபரப்பியது. அறுபது எண்பது ஒரு குறிகாட்டி. அடுத்த ஆரம்பத்தின் அத்திபாரம். அவர் பணி அவர் கற்ற, கற்பித்த பாடசாலைகளுக்கு இனிமேலும் வளம்சேர்க்க வேண்டும். பல்லாண்டு காலம் வாழ்க.

அன்புடன்

**இ. இராஜமகேந்திரன்** (அதிபர்),
யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி.

# கலைநயத்துடன் தமிழ் வளர்த்த சிவபுண்ணியம் சிவலிங்கம்

பொறுமையின் உறைவிடம், பண்பின் சிகரம்,
கிறிஸ்தவ கல்லூரி அன்னையின்
ஆலயத்தில் தமிழ் வளர்த்த - எங்கள்
சிவபுண்ணியம் சிவலிங்கம்
ஓய்வுநிலை பிரதி அதிபர்
கலைநயம் மிக்க தமிழ் ஆசான் - இவர்களில்
கலைநயத்துடன் தமிழ்வளர்த்த
தமிழ் ஆசான் சிவலிங்கத்தைப்போல்
நாங்கள் உங்களில் கண்டோம்
நாங்கள் உங்களிடம் தமிழ் படித்தோம் வகுப்பறையில் அல்ல
அடுத்த வகுப்பறையில் இருந்து கொண்டு
சிவலிங்கம் ஆசிரியரின் வகுப்பறைக்கு
யார் யாரோவெல்லாம் வந்து போவார்கள்
பண்டிதமணி கணபதிப்பிள்ளை வருவார் பேராசிரியர் சு. வித்தியானந்தனுடன்
பேராசிரியர்கள் சிவத்தம்பி கைலாசபதி ஆகியோரும் வருகை தருவார்கள்
நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடன்
சிலசமயம் நடிகமணி வி. வி. வைரமுத்துவும் வந்தார்
ஈழத்தமிழ் அறிஞர்கள் பலரிடம் தமிழ் படிக்கும் தவப்பேறு பெற்ற எங்கள்
சிவபுண்ணியம் சிவலிங்கமே உங்கள்
ஓய்வுநிலை காலத்திலும் எங்கள்
உயிரினும் மேலான தமிழ் அன்னையின்
ஆசி கிடைக்கும் என்று பணிவுடன் வாழ்த்துகின்றோம்.

**க. சிவநேசராசன்**
ஆசிரியர்,
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

## மணிவிழா நாயகனுக்கான
# வாழ்த்து



மணிவிழா நாயகன் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களுடன் கடந்த இருபது வருடங்களாகப் பழகியவன் என்றவகையில் அவரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் சக ஆசிரியராகவும் அவரின் தலைமையின் கீழ் பணிபுரியும் ஆசிரியராகவும் இருந்து அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது இறைவனின் செயலாகும்.


திரு. சிவலிங்கம் அவர்கள் ஆசிரியர், அதிபர், கலைஞர், எழுத்தாளர், பேச்சாளர் என்ற பல் பரிமாணம் கொண்ட ஒருவர். எமது செம்மொழியாம் தமிழ்மொழியில் அவர் ஒரு கடல் போன்றவர். அவர் மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் பாங்கினைக்கூற தமிழில் வார்த்தைகளில்லை. செய்யுள்களை இராகத்துடன் பாடி அவர் கற்பிக்கும் முறை அவருக்கே உரிய தனிக்கலையாகும். அவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று பல்வேறு பதவிநிலைகளிலும் இன்று இருப்பதை நாம் காண்கின்றோம். அதுமட்டுமல்ல. மாணவர்களை அணுகி, அவர்களை வழிப்படுத்தும் பாங்கு திரு. சிவலிங்கம் ஆசிரியருக்குக் கைவந்த கலையாகும்.

இவரின் பேச்சை நாள்முழுவதும் கூட கேட்டுக்கொண்டு இருக்கலாம். ஏனெனில் கரைகடந்த வெள்ளம்போல இனிமையாகவும் கருத்துச் செறிவுடனும் அவரது பேச்சு அமைந்திருக்கும். இதற்கு இவர் மறைந்த முன்னாள் பேராசிரியர் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரிடம் மாணவனாக இருக்கும் வாய்ப்புப் பெற்றதே காரணமாகும். எல்லாவற்றிலும் மேலாக இவர் இறைவன் மீது மிகுந்த பக்தி கொண்டவர், நல்ல உள்ளம் படைத்த மனிதர்.காட்டுமலைக் கந்தன் மீது இவர் ஆக்கிய பாடல்களே இதற்குச் சான்றாகும். இவர் எல்லோரிடமும் இனிமையாகவும் அன்பாகவும் பழகுவார். ஆசிரியர்களிடம் தவறுகள் இருப்பினும் அதனை அவர்களுக்கு பக்குவமாக எடுத்துக்கூறி, அவர்களை வழிப்படுத்துவார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிமீது ஆழ்ந்த பற்றுக்கொண்டு கடந்த 25 வருடங்களாக சேவையாற்றியுள்ளார். கல்லூரியின் வளர்ச்சிக்காக தனது வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்ட திரு. சி. சிவலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**செ. பகீரதன்**
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி

# கடமை தவறாதவர்



திரு. சி. சிவலிங்கம் அவர்கள் இக்கல்லூரியில் 1989ஆம் ஆண்டு முதல் உதவியாசிரியராக சிலகாலம் பணிபுரிந்து, பின்னர் இவரது நற்சேவையினால் உப அதிபராகக் கடமையாற்றினார். இவர் க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் ஆகிய வகுப்புகட்கு தமிழ்ப் பாடத்தை சிறப்பாகக் கற்பித்தார். இதனால் மாணவர்கள் இப்பாடத்தில் நல்ல பெறுபேற்றைப் பெற்றதினால், மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றார். அத்துடன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் பலர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றையும் போதித்தார்.

பழைய மாணவர் சங்கம், மறைந்த அதிபர் தினத்தன்று வெளியிடும் "சுவடு" சஞ்சிகையின் ஆசிரியராகக் கடமைபுரிந்து மாணவர்களினதும் பழைய மாணவர்களினதும் ஆக்கங்களைத் தொகுத்து வழங்கியவர். அத்தோடு பழைய மாணவர் சங்கம் கல்லூரியில் நடாத்தும் சிரமதானப் பணிகளிலும் பங்குபற்றினார்.

மாணவர்களினதும் பெற்றோர்களினதும் நன்மதிப்பைப் பெற்று பணிபுரிந்து 15.07.2014 அன்று ஓய்வுபெற்றுச் செல்கிறார். இவர் நோய்நொடியின்றி நீண்டகாலம் சிறப்பாக குடும்பத்துடன் வாழ இறைவன் அருள்புரிவாராக.

**க. விநாயகலிங்கம்**
உபதலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
கிறிஸ்தவ கல்லூரி,
கோப்பாய்.




சாரணர் சின்னஞ்சூட்டு விழா - 2014




முன்னாள் அதிபர் முத்துக்குமாரசாமியுடன்




தமிழ் விழா - 2013




அதிபருடன் எங்கள் மணிவிழா நாயகன்

# அருமந்த மனிதர்



நல்ல மனிதர்களை, மிக மிக அருந்தலாகவே நமது வாழ்நாளில் சந்திக்க நேரிடுகிறது. அத்தகைய அருமந்த மனிதர்களின் ஒருவர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் ஆவார். "ஆள் தங்கப்பவுண், அவர் நடந்த இடத்தில் புல் சிறும்பாது" - என்பது எனது மனதளவிலான அவரைப் பற்றிய உயரிய மதிப்பீடு. அந்த மதிப்பீடு, மெய்மை குன்றா உண்மைதனை எப்பொழுதும் உணர்த்தி நிற்கும் ஒன்றாகும்.

சிவலிங்கம் அவர்தன் உற்றவர், சுற்றத்தவர், அயலவர், சகமனிதர் என்று எல்லோரிடத்திலும் மிகுந்த நாட்டமும் நேசிப்பும் உடையவர். நண்பர்களிடத்து அகமும் முகமும் மலர நெக்குருகி அன்பு பாராட்டுமியல்பினர். ஆசிரிய நண்பர்களிடம் உசாவி அவர்தம் சுகநலம் பேணுவதில் உயர்வானவர். அவர் பணியாற்றிய கல்லூரிகளின் அதிபர்களிடத்து அவர் பேணிய தலை தாளாத உறவும் அவர்களை மதித்து நடந்த மேன்மையும் சிறப்பாகச் சொல்லப்பட வேண்டியவையாகும். மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் பின்பற்றக்கூடிய அரிய மனிதராகவும் கற்றலை உவந்தளிக்கும் நல்லாசிரியராகவும் அவர் ஓய்வுபெறும் வரை விளங்கினார்.

அவர் பிறந்ததால் அச்சுவேலி புகழும் பெருமையும் பெற்றது. அந்த மண்ணின் பால் மிகுந்த நெகிழ்ச்சியும், நேசிப்பும் உடையவர் அவர். அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் அழகன் முருகன் மீது அளப்பரிய அன்பு பூண்டவர். அதன் பயன் அவர் நமக்கு உவந்தளித்த காட்டுமலைக் கந்தசுவாமி புதிய பிள்ளைத்தமிழ் நூலாகும். அப் பனுவல் பல அரிய இசைப் பிடிப்புள்ள பக்திரசம் மிகுந்த பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் இணையாசிரியர் அவரது துணைவியார் இராஜினிதேவி என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

பிறந்த ஊரில் மட்டுமல்ல, அவர் புகுந்த ஊரிலும் நாலுபேர் மதிக்கும் நற்சான்றோனாக வாழ்ந்து வருகிறார்.

இளமைப் பருவத்திலேயே மிகுந்த சூட்டிகையுடன் இருந்த சிவலிங்கம் தனது ஆரம்பக்கல்வியை யாழ். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யாழ். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் பயின்றார்.

மாணவனாக அவர் துல்லியமான ஆற்றலை வெளிக்காட்டினார். ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் மட்டுமல்லாது உயர்தர வகுப்புகளிலும் தனது ஆளுமை விகசிப்பைக் காட்டத் தவறவில்லை. சிறுப்பிட்டியூர் சைவப்புலவர் செல்லத்துரை அவர்களிடம் தமிழை, க.பொ.த உ/த வகுப்பில் பயின்ற அவர் நல்ல பெறுபேறுகளுடன் பல்கலைக்கழகம் புகுந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அவரது வழிகாட்டியாகவும் ஆசானாகவும் இருந்தவர் பேராசிரியர் க. கைலாசபதி ஆவார். நுண்மாண் நுழைபுலம் மிக்க அப்பேராசிரியர் துணையுடன் அவர் தனது பட்டப்படிப்பில் பிரகாசித்தார். மேலதிக தமிழ்ப்புலமையை அருந்தமிழ் ஆசான் சிவராமலிங்கம் அவர்களிடமும் நற்றமிழ் அறிஞர் பண்டிதர் க. வீரகத்தி அவர்களிடமும் கற்று உன்னத தேர்ச்சி பெற்றார்.

சிவலிங்கம் அவர்கள் ஆசிரியராக எட்டியாந்தோட்டை KG/ புனித மரியாள் தமிழ் வித்தியாலயத்திலும் (12.03.1984 - 13.08.1989) யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் (14.08.1989 - 15.07.2014) ஓய்வுபெறும் வரை பணியாற்றினார்.

கல்லூரி ஆசிரியராக அவர் ஆற்றிய பணி அளப்பரியதாகும். அவரது பணியின் வீச்சும் விகசிப்பும் அவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இருந்த காலத்தில்தான் முழுமை பெற்றது.

மாணவர்களிடத்து மிகுந்த பிரியமுடைய அவர் க.பொ.த சாதாரணதர, உயர்தர வகுப்புகளில் தனது ஆற்றல், வளம் அனைத்தையும் திரட்டி அறிவூட்டினார். அவர் உயர்தர வகுப்பில் தமிழ் கற்பித்த காலத்து அவர்தம் மாணவர்கள் தமிழ்ப் பாடத்தில் பெற்ற பெறுபேறுகள் விதந்து போற்றத்தக்கனவாகும். பாடப்பரப்புக்கு வெளியே சென்று - மாணவர்களது ஆளுமை விருத்திக்கும் பண்பு வளர்ச்சிக்கும் - அவர் கற்பித்தவை குறித்துச் சொல்லக்கூடியவையாகும். கல்லூரிச் சமூகத்தால் மட்டுமல்ல, பிரதேச மக்களாலும் அவர் பாராட்டப்பட்டமை அவர் ஆற்றிய இப் பணிகளால்தான் என்பதைத் துணிந்து கூறமுடியும்.

கற்றற் செயற்பாடுகளுக்கு அப்பால் அவரது புறநிலை சார்ந்த பணிகள் குறைந்தவைஅல்ல, மிகவும் சிறப்புவாய்ந்தவையே.

அவர் கல்லூரியின் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாசிரியராக இருந்தகாலத்தில் ஆற்றிய பணிகள் பல. அக்காலத்தில் மாணவர் நலன்கருதிப் பலதிட்டங்களை முன்னெடுத்தார். குறிப்பாக மாணவரிடத்து இருந்த ஆக்க இலக்கிய நுண்திறனை உய்த்துணர்ந்து அவர்களை அவ்வழி ஊக்குவித்தார். தமிழ்த்தினப் போட்டிகளில் அவர்களைப் பங்குபற்றச்செய்து, ஆக்க இலக்கியங்களான கவிதை, சிறுகதை ஆகியவற்றில் பல விருதுகளையும் பரிசில் பத்திரங்களையும் பெறவைத்தார். அதேசமயம் பிற திறன்களிலும் அவர்கள் பிரகாசிக்க உதவினார்.

அவர் தமிழ்ச் சங்கத்துக்குப் பொறுப்பாசிரியராக இருந்தகாலத்தும் அதற்குப் பின்னரும் - தமிழ்த்தாய் சிலை, - வள்ளுவர், ஔவையார் சிலை, தாமோதரம் பிள்ளை ஆகியோரது உருவச்சிலைகளை கல்லூரி வளாகத்தில் நிறுவ முன்னின்று உழைத்த பெருமை உடையவர்.

அத்துடன் கல்லூரி நுழைவாயில், கல்லூரிக் கலை அரங்கு வளைவு ஆகியவற்றை அமைப்பதற்கு இவரது ஆலோசனையும் உதவியும் நிரம்பக்கிடைத்தது.

பன்முக ஆற்றல்கொண்ட இவர் கல்லூரியின் சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளியிட உதவியதுடன்; 150 ஆவது ஆண்டுமலர், 160 ஆவது ஆண்டு நிறைவு மலர் "சுவடு" சஞ்சிகை என்பன அனைத்தும் இவரது உதவியினாலும் ஊக்குவிப்பினாலும்தான் வெளிவந்தன.

இவரது பணிகளில் மகுடம் வைத்தாற் போல் அமைந்தது - தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களது வரலாற்று நூல் வெளியீடாகும். தமிழ்ச் சங்கத்தின் உதவியுடன் இப்பணியை இவர் செய்துள்ளார்.

இவர் 2002 ஆம் ஆண்டு பிரதி அதிபராகப் பதவியேற்று ஓய்வுபெறும்வரை கல்லூரியின் நிர்வாகப் பணியிலும் கல்வி அபிவிருத்தி மற்றும் மாணவர்நலன், கல்லூரி உள்ளக, வெளிக்களப் பணிகளிலும் மிகுந்த பற்றுடன் செயற்பட்டுள்ளார்.

இயல்பாகவே தமிழ்மீதும், தமிழ்த் தேசிய நலனிலும் மிகுந்த அக்கறையுடைய இவர், கலை இலக்கிய ஆர்வலராகவும் இருக்கின்றார். எனது கலைப் பணிகளையும் படைப்பு முயற்சிகளையும் பெரிதும் பாராட்டும் உபாசகர் இவர்.

இவரது இலக்கியம் மீதான பிரேமையே பண்டைய நூற்புலமையை இவர் பெற்றுக்கொள்ள உதவியதுடன், நவீன தமிழ் வளத்தையும் வீச்சையும் கவனங் கொள்ள வைத்துள்ளது எனலாம்.


தமிழ் எழுத்தாளர்களான புலமைப்பித்தன், சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், ஜெயமோகன், எஸ். பொன்னுத்துரை, மு. தளையசிங்கம் போன்றவர்கள் இவருக்கு அத்துப்படி. அத்துடன் இவரது உலக நோக்குக்கும் பரந்துபட்ட பார்வைக்கும் இவர்களது எழுத்துக்கள் பெரிதும் உதவியுள்ளனவென்று துணிந்து கூறலாம்.

இவர் தனது துணைவியார் மீது மதிப்பும் மரியாதையும் உள்ளவர். பெண்நல விரும்பி. இவரது இன்துணையான இராஜினிதேவி அவர்களும் தமிழ்ப் புலமையிற் சளைத்தவர் அல்லர். நவீன தமிழின்பால் அவர்கொண்ட பற்று அவரை ஓர் அரிய படைப்பாளி ஆக்கியுள்ளது. அவர் "நிலவும் சுடும்" என்னும் சிறுகதைத் தொகுதியை நமக்குத் தந்துள்ளார். இந்நூல் வருகைக்காக அனைத்து முயற்சிகளையும் முன்னின்று செய்தவர் சிவலிங்கம் ஆசிரியர்தான். இச்சிறுகதை நூலைத் தனது அன்புக் கணவருக்கே சமர்ப்பணம் செய்துள்ளார் இராஜினி. இது நாம் மனங் கொள்ளத்தக்க அரிய விடயமாகும்.

எனது நேசர்களான சிவலிங்கமும் இராஜினியும் நீடூழி வாழ எனது மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன். அவர்தம் தொடர் பணிகளுக்கு இறையருள் நிரம்பக்கிடைக்கும் எனும் நம்பிக்கை எனக்கு உண்டு.

**க. சட்டநாதன்**
ஓய்வு பெற்ற ஆசிரியர்

# குருவைப் போற்றுவோம்



மாணவர் சமூகம் மகிழ்ந்தெடுக்கும் மணிவிழாவில் உதிக்கும் மலருக்கு மகத்தான என் குருவின் உத்தம சீடனாய் உருவான பெருமையுடன் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது கல்லூரித் தாயின் வரலாற்றில் கால்நூற்றாண்டுக்கு மேலாக அளப்பெரும் சேவையாற்றி ஆயிரக்கணக்கான உத்தம சீடர்களை உருவாக்கிய பெருமை எம் குருநாதரைச் சாரும். இன்முகம், இனியவார்த்தை, எல்லோருக்கும் இனியவனாய் விளங்கும் விதம் இது எவராலும் புரியமுடியாத தத்துவம். எப்படிப்பட்ட சிறுபட்டிகளையும் அன்பால்கட்டி தன்பால் ஈர்க்கும் உளவியலாளராலும் அறியமுடியாத உளவியல் திறன் இவை எம் ஆசானுக்கே தனித்துவம். கற்ற மாணவர்கள் அனைவரும் பணிவோடு புகழ்ந்துரைக்கும் அளவிற்கு உயர்ந்ததன் மர்மத்தைக் கூடக் கற்பிக்கும் ஆசிரியர்களாலே அறிந்துகொள்ள முடியாத உயர் சிறப்புடையவர்.

ஐந்திற்கும் மேற்பட்ட கல்லூரி முதல்வர்கள் ஆற்றிய சேவைக்கு அடிப்படைத் தூணாக நின்று சேவையாற்றிய பெருமையும் எத்துறை சாய்ந்தாலும் கலைத்துறை சாயாது ஏற்றப் பாதையில் உயர்த்தியபெருமையும் எம் குருவையே சாரும்.

குரு வீட்டில் சென்று கற்ற குழுமத்தில் நானும் ஒருவன். சிவலிங்கத்தின் சிறந்த பகுதி ஆவுடையார். அது இலிங்கத்துடன் அத்துவிதமாய்க் கலந்த வடிவம். அதனைப் பிரித்தறிதல் முடியாது. சிவத்தின் பெருமை சக்தியைச் சாரும். சக்தியின் பெருமை சிவத்தைச் சாரும். அது போல குருநாதர் சிவலிங்கத்தையும் குருபத்தினி இராஜினிதேவியையும் எம்போன்ற சீடர்களால் பிரித்தறியமுடியாது. அவர்கள் ஈருடல் ஓர் உயிர் கொண்டவர்கள். நல்ல மேய்ப்பாரற்ற தகர்களாகிய எமக்கு நல்ல மேய்ப்பர்களாக இறைவனால் படைக்கப்பட்ட வழிகாட்டிகள். அவர்கள் காட்டிய புனிதப் பணியில் எம் பயணம் தொடர்கின்றது. எம் குருநாதரும் அவர்தம் குருபத்தினியும் உடல், உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.


மாணவர் சார்பில்
S.K. **கிருபாகரன்**
ஆசிரியர் தமிழ்த்துறை,
யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்,
நிர்வாக இயக்குனர்,
மதுரம் கல்வி நிறுவனம்.

# ஆசானுக்கு ஆசானாய்....



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் கல்வி வரலாற்றில் தடம்பதித்து கல்லூரி வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்காகவும் பல ஆண்டுகளாகச் சேவையாற்றி, ஆயிரக்கணக்கான மாணவர்களின் மனங்களில் என்றும் நிறைந்திருக்கும் எங்கள் ஆசான் திரு. சி. சிவலிங்கம் அவர்களையும் திருமதி சிவலிங்கம் அவர்களையும் இந்நாளில் போற்றி நிற்கின்றோம். எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றிய உத்தமர்கள். கல்வியோடு கேள்வியும் ஒழுக்கமும் கலந்து நமக்களித்த கல்வி மகான் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்கள். மாணவர்களின் மனங்களின் மணிவிளக்கு. கள்ளமில்லா சிந்தனையோடு கலகலப்பும் களிப்பும் சேர்ந்தமைய பாடவிடயங்களைப் புகுத்தும் பக்குவம் யாருக்கு வரும்? படித்த விடயங்களை மீட்டிப் பார்க்கத் தேவையில்லை. அந்தளவிற்குப் பதிந்திடும் மனதில். மன்றங்கள் அமைத்து மாணவர்களின் ஆளுமையை வளர்த்து மண்ணில் முழுமனிதராய் ஆசிரியராய் என்னையும் உருவாக்கியவர் எங்கள் சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள்.

கடல்கடந்தும் பல உள்ளங்களில் குடிகொண்ட உத்தமர். பார்போற்றும் உத்தமராய் பள்ளியில் கடமையாற்றி மணிவிழாக் காணும் எங்கள் மனம் நிறைந்த ஆசானின் மணிவிழா நன்நாளில் மனதார வாழ்த்துவதில் நானும் எனது குடும்பத்தவர்களும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றி

மாணவர்கள் சார்பாக
**திரு. பா. சசிகுமார்**
ICT ஆசிரியர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



# நன்றி நவில்கின்றோம்



எமது அன்புக்குரிய ஆசானின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மணிவிழாவைச் சிறப்புற நடாத்துவதற்கு நிதி உதவிகளை வழங்கிய எங்கள் தமிழ்ஆசானின் மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். விழா மலரினை அழகுற அச்சிட்ட "அன்றா" பதிப்பகத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மணிவிழா சிறப்புற நடைபெற அனைத்து உதவிகளையும் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மணிவிழாக் குழு
(மாணவர்கள்)


யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
J/KOPAY CHRISTIAN COLLEGE
1999
FOR TRUTH & JUSTICE
ANDRA PRINTERS, JAFFNA - 021-221 7279